# பணியிட விபத்துகள் 58.9% உயர்வு
# அதிகமாக காயமடைந்தவர்கள் ஆண்கள்

கோலாலம்பூர், அக். 1-
நாட்டில் பணியிட விபத்துகள் 58.9 விழுக்காடாக அதிகரித்திருக்கிறது என்று புள்ளிவிவர இலாகா தலைவர் டத்தோ ஸ்ரீ டாக்டர் முகமட் உஸிர் மஹிடின் கூறினார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு 21,534 ஆக இருந்த இந்த சம்பவங்கள் 2022 ஆம் ஆண்டு 34,216 ஆக உயர்ந்திருக்கின்றன என்றார் அவர்.

கடந்த 2021 ஆம் ஆண்டில் ஆயிரம் பேருக்கு 1.41 விகிதமாக இருந்த இந்த விபத்துகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டு 2.22 விகிதமாக உயர்ந்துள்ளது.

அதிக காயங்கள் இல்லாத 33,893 பணியிட விபத்துகள் நடந்துள்ளன. கடந்த 2021 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 21,233 ஆக மட்டும் இருந்தது. மொத்தம் 59.7 விழுக்காடாக இது அதிகரித்திருக்கிறது.

மிகவும் கடுமையாக காயமடைந்த தொழிலாளர்களை கொண்ட பணியிட விபத்துகள் கடந்த 2022 ஆம் ஆண்டு 317 ஆக பதிவானது. கடந்த 2021 ஆம் ஆண்டில் அது 301 ஆக இருந்தது. 16 சம்பவங்கள் அதிகரித்திருக்கின்றன.

தொழிலாளர்கள் கடுமையாக காயமடைந்த பணியிட விபத்துகள் கடந்த 2021 ஆம் ஆண்டில் ஆயிரம் பேருக்கு 2.00 விகிதமாக இருந்தது. 2022 ஆம் ஆண்டு அது 2.06 விகிதமாக உயர்ந்துள்ளது என்றார் அவர்.



பணியிட விபத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களில் 3இல் 2 மடங்கு பேர் (84.2விழுக்காடு) ஆண்கள் ஆவர். அதே போல 18.8 விழுக்காடு கொண்ட பெண்களும் பணியிடவிபத்தில் காயமடைந்திருக்கிறார்கள்.

மலேசியர்களில் 86.6 விழுக்காட்டினர் சம்பந்தப்பட்ட 30,325 சம்பவங்கள் நடந்தன. மலேசிய பிரஜைகள் அல்லாத 11.4 விழுக்காட்டை கொண்ட 3,891 சம்பவங்கள் நடந்துள்ளன. ஜொகூர் மாநிலத்தில் அதிகமான பணியிட விபத்துகள் நடந்தன. அதைத்தொடர்ந்து கோலாலம்பூர், புத்ராஜெயா, பினாங்கு, பேரா மாநிலங்களிலும் பணியிட விபத்துகள் நடந்துள்ளன.